மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 28/2018

பெயர் – ராமசாமி செட்டியார் (பி.வா.சா.1)

நாள் – 10.06.2024

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரிலும், சத்தியப்பிரமாணத்தின் பேரிலும் வாதி (Inperson) தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் இந்த வழக்கில் 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கிற்கு மட்டும் தான் நான் ஆஜரானேன். 9 முதல் 11 பிரதிவாதிகளான சீனியம்மாள், கிருஷ்ணவேணி, ராஜலட்சுமி ஆகியோர்கள் இந்த வழக்கில் தாமாகவே இடையில் சேர்ந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதையும் நீங்களே தான் சேர்த்துள்ளீர். இந்த வழக்கில் வாதி மற்றும் 11 பிரதிவாதிகளும் பங்காளிகள் என்றால் வாதி மற்றும் 7 பிரதிவாதிகள் தான் பங்காளிகள். இறந்துபோன சரஸ்வதியின் வாரிசுகளும் பங்காளிகள் என்றால் அவர் இறந்த பிறகு தான் அவர்களை வாதி சேர்த்துள்ளார். தபசில் சொத்துக்களைத் தவிர வாதி மற்றும் எனது தாய், தகப்பனார் பெயரில் வேறு சொத்துக்களும் உள்ளன என்றால் வேறு சொத்துக்கள் அம்மா, அப்பா பெயரில் உள்ளது. நான் அரசாங்கத்தில் முதியோர் உதவித்தொகை பெற்று வருகிறேன் என்றால் சரிதான். அதுபோக நான்கு மாதங்களுக்கு ஒருமுறை பிரதம மந்திரியின் திட்டத்தின் கீழ் ரூ.2000 பெற்று வருகிறேன் என்றால் சரிதான். நான் சுயமாக சொத்து சம்பாதித்துள்ளேனா என்றால் வீடு உள்ளது. பிரதம மந்திரியின் நலத்திட்டத்தின் கீழ் ரூ.2000 பெறுவதற்காக நான் எனது தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களை காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.28 ஆவணத்தில் சர்வே எண்.167/2 ஏ–ல் 1 ஏக்கர் 26 செண்டுக்கான பட்டா என் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் பட்டா ஏற்பட்டதே எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அந்த பட்டா பற்றியே எனக்கு தெரிய வந்தது. எனது தகப்பனார் எனக்கு யூடிஆர் பட்டா மூலமாக நிலம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. தபசில் சொத்து பெருமாள் செட்டியாரின் சுயார்ஜித சொத்து என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் தபசில் சொத்து பூர்விக சொத்து என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் அனைத்து சொத்துக்களும் எனது அம்மா, அப்பாவுக்கு பாத்தியப்பட்டது தான்.

எதிர்வழக்குரையில் வாதியாகிய நான் மோசடியாக யூடிஆர் பட்டா பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அந்த பட்டா பற்றி இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் தெரியும். அதற்கு முன்பு பட்டா கிடையாது. வாதி மோசடியாக பட்டா பெற்றதாக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். ரவிப்பாண்டியன் என்பவர் வாதி பெயரில் உள்ள யூடிஆர் பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென மனு பி.வா.சா.ஆ.2 கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவரை தான் கேட்க வேண்டும். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆவணம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அ.வ.எண்.09/2016 வழக்கில் நான் அளித்த சாட்சியத்திற்கான ஆவணம் நிரூபண வாக்குமூலம் மற்றும் குறுக்குவிசாரணை என்றால் சரிதான். அது வா.சா.ஆ.30 ஆகும். அந்த சாட்சியத்தில், எங்கள் தபசில் சொத்தின் சர்வே எண்.163/2 ஆகும். எங்கள் குடும்ப ஏற்பாட்டின்படி மேற்கண்ட புல எண்ணின் ஒரு பகுதியை எனது அண்ணன் பெருமாள்ராஜ்க்கு ஒதுக்கப்பட்டது என்று நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் பெருமாள்ராஜ் மற்றும் பெருமாளம்மாள் ஆகியோர்களுக்கு நடந்த எம்.சி.02/2016 வழக்கில் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.31 ஆகும். வா.சா.ஆ.31 ஆவணத்தில் எங்களுக்குள் குடும்பத்தில் எங்களுக்கு பாகமாக பாத்தியப்பட்டு எங்களுக்குள் வாய்மூலமாக பாகப்பிரிவினை மூலம் கிடைத்த நிலங்களில் அவரவர் கிடைத்த பாகத்தை அனுபவித்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணம் நமது தகப்பனாரின் சொத்தை யாரும் வில்லங்கம் செய்யக்கூடாது என விருதுநகர் மாவட்ட பதிவாளருக்கு நாங்கள் அனைவரும் சேர்ந்து கையொப்பம் செய்து மனு அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் நமது தகப்பனாரின் சொத்துக்களை யாரும் வில்லங்கப்படுத்தக்கூடாது என நாளிதழில் பொது அறிவிப்பு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள பொது அறிவிப்பில் 16.12.1994 ல் எமது கட்சிக்காரர்களின் குடும்பத்தில் செய்து கொண்ட

குடும்ப ஏற்பாட்டின்படி எல்லா சொத்துக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த குடும்ப ஏற்பாட்டு பத்திரத்தின்படி சொத்துக்கள் இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ஆவணப்படி நமது குடும்பத்திற்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். தபசில் சொத்து பெருமாள் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் அவர் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா, 10 (1) அடங்கல் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூலப்பத்திரமே உன்வசம் (வாதி) தான் உள்ளது. வாதிக்கு சொந்தமான நிலத்தை 1 முதல் 8 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்களுக்கும் சொத்து வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளோம். 1 முதல் 8 பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக அப்பையநாயக்கன்பட்டி காவல்நிலையத்தில வாதி புகார் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அதற்கான ஆவணம் தான் வா.சா.ஆ.10, 14, 19, 21 என்றால் சரிதான். அந்த ஆவணங்களை வாதியே தான் எழுதிக் கொடுத்துள்ளார். அப்பையநாயக்கன்பட்டி காவல்நிலையத்தில் இனிமேல் இடையூறு கொடுக்க மாட்டோம் என எழுதிக் கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தவறான தகவல்கள் சொல்லியுள்ளதால் வாதி கோரியுள்ள பரிகாரத்தை வாதிக்கு வழங்க வேண்டுமென்றால் சரியல்ல.